**கஹட்டகஹா கிரபைட் லங்கா லிமிடட்– 2021/2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

கஹட்டகஹா கிரபைட் லங்கா லிமிடட் (“கம்பனி”) 2022 மார்ச் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள்இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவ்வறிக்கையின் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தவிர்த்து கம்பனியின் 2022 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ்வறிக்கையின் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கமைய எனது அபிப்பராயம் முனைப்பழியானது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வது எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோளாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ் கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மெற்கொள்ளப்படும் பொருளதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்கு செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காயிவின் பகுதியொன்றாக, கணக்காயிவின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீட்டு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றை கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருன்மையான நிச்சியமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள

வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணப்பாய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாக காணப்டுகின்றன. எவ்வாராயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கல்லூரியின் தொடர்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதினை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள், மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிமைக்கப்பட்ருபடபதனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக செய்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்மான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்க பூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதாணிப்புக்கள்

### 1.5.1 சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களுக்கான கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | நியமம் மற்றும் கொள்கைகளின் குறிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களுக்கான நியமத்தின் 2.36ம் பந்தியிலிருந்து வேறுபட்டு 2018 தொடக்கம் 31 மார்ச் 2021 இற்கான நிலையான வைப்பு வட்டி ரூபா 1,939,610 ஆனது காசு அடிப்படையில் நடப்பாண்டின் வட்டி வருமானமாக காட்டப்பட்டிருந்தது. ஆகவே நிதியான்டின் இலாபமானது குறித்த தொகையினால் அதிகமாக காட்டப்பட்டிருந்தது. | ஏதிர்காலத்தில் அட்டுறு அடிப்படையில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களுக்கான நியமங்களுக்கு அமைவாக நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களுக்கான நியமத்தின் 10.23 பந்தியின் (ய) இலிருந்து (ன) வரையான தகவலின் படி முன்னைய நிதியாண்டின் சீராக்கங்கள் ரூபா 3,883,025 நடப்பாண்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளர்களினால் சுட்டிக்காட்டப்பட்ட முன்னைய ஆண்டின் பல தவறுகள் நியகத்தின் 10.21 ன் படி சரி செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றன. | நியமத்தின் அடிப்படையில் வெளிப்படுத்த வேண்டிய தகவல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16ன் 79(உ) பந்தியின்படி பாவனையில் இல்லாத இயந்திரங்களின் பெறுமதி ரூபா 23,210,000 நிதிக்கூற்றுக்களில் வெளிப்படத்தப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட பழமையான இயந்திரங்கள் கொலங்ககா(முழடழபெயாய) வேலைத்தளத்தில் தற்பொழுது பாவனையிலில்லை என்பதோடு இவ்வியந்திரங்கள் அண்மையில் ஆரம்பிக்க எதிர்பார்கப்படும் நூதன சாலையில் காட்சிப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது. சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களுக்கான நியமத்தின் 17.16ன் படி இவ்வியந்திரங்களின் பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட் காலம் என்பன தீர்மானிக்க முடியாமையினால் இலங்கை கணக்கீட்டு நியமம் 16ன் படி பெறுமான தேய்விட முடியாது. | நியமத்தின் அடிப்படையில் வெளிப்படுத்த வேண்டிய தகவல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியானது தொடர்ச்சியாக விற்பனை தொடர்பில் வாடிக்கையாளரிடமிருந்து றோயல்டி(சுழலயடவல) அறவீடு செய்கின்ற போதிலும் இது தொடர்பான கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. நடப்பாண்டில் புளுஆடீ ற்கு வாடிக்கையாளர் சார்பாக செலுத்தப்பட்ட றோயல்டி ரூபா 827,410 வருமதியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | இக்கொடுப்பனவு 2022/2023 ஏப்ரல் மாதத்திற்கரியது மேலும் இத்தொகையானது 18.04.2022 அன்று வாடிக்கையாளர்களினால் மீளளிக்கப்பட்டிருந்தது. | விற்பனை தொடர்பான றோயல்டி அறவீடு மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தமான கொள்கைஇகொடுக்க வேண்டிய தொகை என்பன நிதிக்கூற்றுக்களில சரியாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | இருப்பு மாற்றம் ரூபா 127,734 ஆன தொகையால் காசுப்பாய்ச்சல் கூற்றில் குறைவாக காட்டப்பட்டிருந்ததுடன் வட்டிக்கொடுப்பனவு அதே தொகையால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | முகாமைத்துவமானது எதிர்வரும் நிதிக்கூற்றுக்களில் சரியாக வெளிப்படுத்த தீர்மானித்துள்ளது. | காசு உட்பாய்ச்சல்இவெளிப்பாய்ச்சல் என்பன காசுப்பாய்ச்சல் கூற்றின் மாதிரிக்கமைய வெளிப்படுத்தப்பட வேண்டும். |

**1.6 சட்டம்இகொள்கை மற்றும் முகாமைத்துவ தீர்மானம் என்பவற்றுடன் இணங்காமை.**

| | சட்டம்இகொள்கை தொடர்பான குறிப்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 16 நவம்பர் 2021ல் பொது நிறுவன சுற்றறிக்கை இல 01/2021னால் அறிமுகப்படுத்தப்பட்ட செயற்ப்பாட்டு கையேட்டின் 6.6ம் பந்தி | நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைவு ஆண்டறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் என்பன கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆனால் 2021/2022 இற்கான நிதிக்கூற்றுக்கள் 03.04.2023ல் சமர்ப்பிக்கப்படடிருந்தது. | 2021/2022 இற்கான மீதிகள் 2020/2021 நதிக்கூற்றுக்களிலிருந்து பெறப்பட வேண்டுமென்பதால் இத்தாமதம் 2020/2021 கணக்காய்வு தொடர்பில் ஏற்பட்டதாகும். | சுற்றறிக்கைக்கு இணங்க 60 நாட்களுக்குள் வரைவு ஆண்டறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் என்பன உரிய தினத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2018ம் ஆண்டின் இல 19 தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40வது பிரிவு | உள்ளக கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை | உள்ளக கணக்காய்வாளரினை நியமிப்பதற்கான அனுமதி முகாமைத்துவ திணைக்களத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற போதிலும் தற்போதய நிதிநிலைமை காரணமாக தற்காலிக(யுஉவபை) அடிப்படையில் கைத்தொழில் அமைச்சினால் நேரத்திற்கு நேரம் உள்ளக கணக்காய்வாளர் நியமனம் வழங்கப்பட்டிருந்தது. | உள்ளக கணக்காய்வாளரினை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறுகள் ரூபா 11,085,760 ஆன இலாபமாக காணப்பட்டதுடன், அதனோடொத்த கடந்த வருடத்தின் இலாபம் ரூபா 11,477,201 ஆகும். அதன் பிரகாரம் நிதிப்பெறுபேறுகளில் ரூபா 391,441 ஆன குறைவொன்று அவதானிக்கப்பட்டது. எப்படியாகிலும் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 2,734,776 ஆல் அதிகரித்திருந்ததுடன நேர்செலவு ரூபா 2,233,726 ஆல் குறைவடைந்திருந்தது. மேலும் விற்பனை வருமானம் ரூபா 2,714,446 ஆல் குறைவடைந்திருந்ததுடன் நிர்வாக செலவு மற்றும் பராமரிப்பு செலவு என்பன முறையே ரூபா 1,645,717 இனாலும் ரூபா 203,045 இனாலும் அதிகரித்திருந்தமையே இலாபத்தில் இவ்வாண்டு ஏற்ப்பட்ட குறைவிற்கு காரனமாக அமைந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கஹட்டகஹா சுரங்கத்திற்கு சொந்தமான 26.5 மற்றும் 6 ஏக்கர் அளவு கொண்ட இரு நிலப்பகுதிகள் மீது உரிமை கோரி வெளித்தரப்பினரால் 2004 மற்றும் 2007ல் தொடரப்பட்ட இரு வழக்குகளும் கணக்காய்வாண்டு 31.05.2023வரை முடிவின்றி காணப்பட்டது. | நிறவனத்தினால் நீதி தொடர்பான வடயங்களில் தற்போதய நிலைமையில் தலையிட முடியாமலுள்ளது. | கம்பனிக்கு உரிய சொத்துக்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சட்டரீதியற்ற முறையில் சுரங்க இடம் 8 ரூட்ஸ்(சுழழனள) மற்றும் 87 பேர்ச்சில்(ீநசஉாநள) வாழுகின்ற சுரங்கத்தில் வேலை செய்கின்ற மூன்று பேர் உட்பட பதினொரு நபர்களை வெளியேற்றுவதற்கு அமைச்சு மட்டத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும் 31.05.2023 வரை சட்டரீதியற்ற குடியிருப்புக்கள் வெளியேற்றப்பட்டிருக்கவில்லை. | நிர்வாகத்தினரால் சட்டரீதியற்ற தரப்பினரை வெளியேற்ற வலுக்கட்டாயமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது எனினும் அக்குடியேற்ற நடவடிக்கைகள் முழுமையாக நிறுத்தப்படவில்லை. | கம்பனிக்கு உரிய சொத்துக்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2003 ஒக்டோபர் 15ம் திகதியிலான கொள்கை வகுப்பு அமைச்சின் செயலாளலரின் கடிதத்திற்கமையஇடொடம்கஸ்லந்த(னுழனய அபயளடயனெய) இளைஞர் கழகத்திற்கு தேவையான பகுதியினை கஹட்டகஹா நிறுவனத்திற்கு சொந்தமான நிலப்பகுதியிலிருந்து வழங்குவதற்கு இயக்குணர் சபையினால் 2003 ஒக்டோபர் 16ல் தீர்மாணிக்கப்பட்டது. இதனடிப்படையில் 2003 ல் மூன்று வருடத்திற்கு வழங்கப்பட்டமை கணக்காய்வு வருடத்தில் 18 வருடங்களால் மேலதிகமாக காணப்பட்டதுடன் இந்நிலமானது எவ்வித குத்தகை ஒப்பந்தமில்லாமலும் வாடகை எதுவுமின்றியும் பாவிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது. | இத்தாமதம் தற்போது மேற்கொள்ளப்படுகின்ற சட்ட நடவடிக்கை காரனமாக ஏற்பட்டதாகும். | ஒப்பந்த அடிப்படையில் செயற்படுவதற்கும் நிலுவையான வாடகை வருமதியினை அறவீடு செய்வதற்கும் தொடர்புடைய தரப்பினருடன் ஒப்பந்தம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | குறிப்பிட்ட சில வருடங்களுக்கு முன்பு 1130 அடியிலிருந்து 2000 அடி அளவிற்கு இரண்டாவது சுரங்க குழிக்கிற்கான தேவை கண்டறியப்பட்டு ஆரம்ப வேலைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் மேற்கொண்டு நடவடிக்கைகள் எதுவும் செய்யப்படவில்லை. | இரண்டாவது சுரங்க குழிக்கிற்கான வேலைகள் கொரோனா காரணமாக பிற்போடபட்டுள்ளதுடன் வெடிமருந்து பற்றாக்குறையினால் 2023ல் மீள ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | திட்டமிட்டபடி செயற்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட வரி வருமதி ரூபா 6,207,281 யினை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்நாட்டு வரி வருமான திணைக்கள விடுவிப்பு மற்றும் கணக்காய்வு வரைக்கும் தீர்ப்பதற்கு முடியாதிருந்தது. | தீர்பதற்கான நடவடிக்கைகள் உள்நாட்டு வரி வருமான திணைக்களத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியானது உயர் கார்பன் கிர.ஃபைட்டினை அகழ்வதற்கும் மாத சராசரி உற்ப்பத்தியினை 90 மெற்றிக் டொன் ஆக உயர்துவதற்கும் திட்டமிட்டிருந்த போதிலும் நிதியாண்டு காலத்தில் மாத சராசரி உற்ப்பத்தி 29 மெற்றிக் டொன் ஆகவும் மொத்த வருட உற்ப்பத்தி 342.35 மெற்றிக் டொன் ஆகவும் காணப்பட்டது. மேலும் கடந்த ஆண்டு உற்ப்பத்தி 599.30 மெற்றிக் டொன் ஆக இருந்ததுடன் நிதியாண்டு உற்ப்பத்தி கடந்த ஆண்டுடன் ஒபடபிடுகையில் 256.95 மெற்றிக் டொன்னால் குறைவாக இருந்தது. | 2021 ல் ஏற்ப்பட்ட கன மழை வெள்ள நீர் நிரம்பியமையினால் கிர.ஃபைட் கிடங்கு மூடப்பட்டிருந்தது. மேலும் கொரோனா பரவல்இமின்சார மற்றும் எரிபொருள் பற்றாக்குறைஇவேலையாட்கலின் வரையறை போன்ற காரணங்களினால் திட்டமிட்ட இலக்கினை அடைய முடியாமல் போனது. | நடைமுறை சிக்கல்களை கருத்தில் கொண்டு திட்டங்கள் வகுக்கப்பட்டு அதனை நடைமுறைபடபடுத்துவ தற்டகா நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | நிதியாண்டில் செயற்பாட்டினால் ரூபா 219.7 மில்லியன் வருமானம் உழைப்பதற்கும் மூலப்பொருள் ஏற்றுமதியினை 680 கிர/பைட் மெற்றிக் டொன் ஆக்குவதற்கும் செயற்ப்பாட்டுதிட்டத்தினில் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் நிதியாண்டு முடிவில் உள்ளாட்டுஇவெளிநாட்டு கிர.ஃபைட் விற்ப்பனை 384.81 மெற்றிக் டொன் ஆக காணப்பட்டதுடன் வருமானம் ரூபா 123.4 மில்லியனாக மட்டுமே இருந்தது. | ஏற்கனவே காணப்பட்ட இருப்பு பெறுமதியேற்றப்பட்டதுடன் ஆரம்பத்தில் 10 மெற்றிக் டொன் கிர.ஃபைட மீள்செயற்படுத்தப்பட்டது். பல முயற்ச்சிகள் மேற்க்கொள்ளப்பட்ட போதிலும் புதிய உற்பத்தி பொருள் (ழூ97/99) இற்கான சந்தையினை கண்டபிடிக்க முடியாமல் போனது். | நடைமுறை சிக்கல்களை கருத்தில் கொண்டு திட்டங்கள் வகுக்கப்பட்டு அதனை நடைமுறைபடபடுத்துவ தற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | நிறுவனத்தின் தொலைநோக்கானது உலகினில் இயற்கை கிறிஸ்ரலின் கிர.ஃபைட்டின்(ஊசளைவயடைநெ புசயிாவைந) மூலாதாரமாக இருத்தல் என்பதாக இருப்பதுடன் கம்பனியானது சர்வதேச அளவில் வாடிக்கையாளர்களை தெரிவு செய்வதற்கு கேள்வி கோரல் எதனையும் மேற்கொள்ளவில்லையென்பதுடன் மொத்த உற்ப்பத்தியும் இரண்டு வெளிநாட்டு வாடிக்கையாளர்கர்களுக்கே வழங்கப்பட்டிருந்தது. இதனூடாக கம்பனியின் தொலைநோக்கிற்கிணங்க வேலை முகாமைத்துவம்இ சர்வதேச சந்தையில் | தற்பொழுது கேள்வி கோரும் இந்நோக்கத்திற்காக அமைச்சுடன் இணைந்து செயற்ப்படுவதுடன் கம்பனியினில் காணப்படும் இருப்பினை விற்பதற்கு முன்னைய காலத்தில் இருமுறை சர்வதேச அளவில் முயற்ச்சிகள் மேற்க்கொள்ளப்பட்ட போதிலும் வாங்டகுவதற்கு யாரும் முன் வரவில்லை. | தொலைநோக்கிற்கிணங்க குறிக்கோள்கள் உருவாக்கப்பட்டு அதனை அடைவதற்கான நடவடிக்கைகள் மேற்க்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போட்டியினை ஏற்ப்படுத்தல்இ கிர.ஃபைட்டிற்கு அதிக விலையினை பெறல் மற்றும் புதிய சந்தையினை கண்டறிதல் என்பன சாத்தியமற்றதானது. மேலும் நிதியாண்டில் திட்டமிட்ட சந்தைப்படுத்தல் நடவடிக்கைஇதுாதரங்களின் உதவியினைப் பெறல் மற்றும் சர்வதேச மூலங்களிலுருந்து உலக விலையினை பெறல் போன்ற வியாபார மேம்படுத்தல் நடவடிக்கைகள் மேற்க்கொள்ளப்பட்டிலுக்கவில்லை. | | |
| (ஈ) | கிர.ஃபைட்டிற்கு பெறுமதி சேர்க்கும் நோக்கில் ஆய்வு கூடம் உருவாக்கப்பட்ட போதிலும் ஏற்றுமதிக்கான கிர.ஃபைட் மாதிரிகள் கொண்டுள்ள கார்பன் அளவினை மதிப்பிடல் தவிர்ந்த வேறெந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.இது வரையில் கம்பனியானது கிர.ஃபைட்டினை ப்ளேக்ஸ்(குடயமநள ' (97மூ-99மூ) மற்றும் சிப்ஸ்(ஊஹனிள) 99மூ-92மூ) என்ற முறையிலேயே ஏற்றுமதி செய்திருக்கின்றதுடன் முடிவுப்பொருட்களுக்கோ அல்லது அரைகுறை பொருட்களுக்கோ பெறுமதி சேர்க்கும் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பல வகையான பெறுமதி சேர்க்கும் நடவடிக்கைகள் ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் நிதி குறைபாடு காரணமாக கைவிடப்பட்டிருந்தது. | கிர.ஃபைட்டிற்கு பெறுமதி சேர்க்கும் வேலைத்திட்டத்தற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்க்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | பெரும்பாலான கிர.ஃபைட் இருப்பு குறைந்தளவான கார்பன் வீதம் 57மூ னை கொண்டிருந்ததாலும் செயற்ப்பாட்டு திட்டத்திற்கு அமைய குடழவயவழைெ இயந்திரம் ஒன்றினை கொள்வனவு செய்து இவ்வியந்திரத்தின் உதவியுடன் குறைந்தளவான கார்பன் வீதம் கொண்ட கிர.ஃபைட்டின் கார்பன் அளவினை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் நிதிப்பற்றாக்குறை காரணமாக இந்நடவடிக்கையானது 2023.06.30 வரையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்நோக்கத்திற்காக ரூபா 20 மில்லியிற்கான் அனுமதி திறைசேரியிடமிருந்து பெறப்பட்டுள்ளதுடன் கடழவயவழைெ இயந்திரத்தினை கொள்வனவு செய்து நிறுவும் பணிகள் மேற்க்கொள்ளப்படுகின்றன. | நடைமுறை சிக்கல்களை கருத்தில் கொண்டு திட்டங்கள் வகுக்கப்பட்டு அதனை நடைமுறைபடபடுத்துவ தற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | 2006ல் பாவணையிலிருந்து அகற்றப்பட்ட கம்பனிக்கு சொந்தமான ஜீப் வண்டியொன்று திருத்த வேலையின்றியும் அகற்றப்படாமலும் குாணப்பட்டது.<br><br>. | இயக்குணர் சபையானது இவ்ஜீப் வண்டியினை திருத்தி பயண்படுத்துவதற்கு தீர்மாணித்துள்ளது. | திருத்தி பயண்படுத்துவதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | கம்பனியின் தென்னை பயிரிடல் வருமாணம் ரூபா 1,609,395 தனியான வருமான மூலமாக அடையாளப்படுத்துவதற்கு பதிலாக ஏனைய வருமானமாக காட்டபடபட்டிருந்தது. மேலும் இது தொடர்பான செலவு ரூபா 2,587,823 ஆக காணப்பட்டதுடன் தேறிய நட்டம் ரூபா 978,428 ஆக இருந்தது | சுரங்க காணி 102 ஏக்கரினை பாதகாப்பாக பராமரிப்பது கம்பனியின் கடப்பாடு ஆவதுடன் கடந்த காலத்தில் முகாமைத்துவத்தினால் தென்னை பயிரிடல் வருமாணத்தினை சுரங்க வருமாணத்திற்கு மேலதிகமாக ஏனைய வருமானமாக காட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வருமான உழைப்பு மூலங்கள் தனியாக அடையாளப்படுத்தப்பட்டு அறிக்கையிடப்பட வேண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அனுமதியளிக்கப்பட்ட பணிநிலைக்கேற்ப்ப கம்பனியானது ஒப்பந்த அடிப்படையில் 79 ஊழியர்களை மாத்திரமே வேலைக்கமர்த்த முடியுமெனினும் 42 நிரந்தரஇ74 ஒப்பந்த அடிப்படைஇ9 தற்காலிக ஊழியர்கள் மற்றும் ஒரு செயற்பாட்டு (யுஉவபைெ) ஊழியர் உள்ளடங்கலாக 126 பேர் நிதியாண்டு முடிவில் காணப்பட்டனர். | இது முகாமைத்துவ திணைக்களத்தின் அனுமதியினை பெறுவதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் தற்பொழுது 5 உயர் நிலை பணியிடங்களுக்கு அனுமதி கிடைத்துள்ளது. சுரங்கத்தினை நடாத்துவதற்கு தேவைப்படும் நேரங்களில் ஊழியர்களை உள்ளீர்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்துள்ளது. | ஊழியர்கள் அனுமதியளிக்கப்பட்டு அதனடிப்படையிலேயே உள்ளீர்க்கப்பட வேண்டும். |